இணைப்பு I.

[1-ம் பக்கத்திலுள்ள வெள்ளிக் குறியிட்ட வினா 86-க்குரிய விடையைக் காண்க.]

தமிழ் நாடு அரசின் சமூக நலப் பாதுகாப்புத் திட்டம், 1974.

சமூக நலத்திட்டங்கள் பலவற்றை செயல்படுத்தும் நற்பணியில் தமிழக அரசு என்றுமே முன்னணியில் நிற்கிறது.

1974 ஜனவரி முதல் நாளில் தமிழ்நாடு குடும்ப நலத் திட்டம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. அரசு ஊழியர்கள், உள்ளாட்சி மன்ற ஊழியர்கள், மானியம் பெறும் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள் ஆகியோரின் குடும்பங்களின் பாதுகாப்புக்காக வரையப்பட்ட இத்திட்டம் மொத்தம் 6.5 இலட்சம் பேருக்கு நன்மை பயக்கின்றது. ஊழியர்களின் நலனைப் பாதுகாத்ததுடன் நின்றுவிட விரும்பாத தமிழக அரசு, பொது மக்களின் நன்மைக்காக, மற்றொரு திட்டத்தையும் தமிழக மக்களின் முன் வைக்கிறது. இதுதான் தமிழ்நாடு அரசின் 1974 ஆம் ஆண்டு சமூக நலப் பாதுகாப்புத் திட்டம்.

ஒருவர் வேலை செய்து சம்பாதிக்கும் காலத்தில், தொடர்ந்து, இடைவிடாமல் சிறு தொகை ஒன்றை செலுத்தி வந்தால் அவருக்கு பிற்காலத்தில் மாதாமாதம் கணிசமான ஓய்வூதியத் தொகை இத்திட்டத்தின்கீழ் கிடைக்கும். ஓய்வூதியத் தொகை முப்பது ஆண்டுகளுக்குக் கிடைத்து வரும். ஓய்வூதியக் கால அளவு முடிந்த பின் மொத்தத் தொகை ஒன்றும் இத்திட்டத்தின்கீழ் கிடைக்கும்.

இத்திட்டத்தில் சேர வயது வரம்பு கிடையாது; நுழைவு கட்டணம் இல்லை. சிறுவர் பெயரில் கூட கணக்குகளைத் தொடங்கலாம்.

நான்கு வகை சந்தாத் தொகைகள் இத்திட்டத்தின்கீழ் உண்டு. மாதம் ஒன்றுக்கு ரூ. 10, 20, 30, 60 செலுத்தலாம். ஏழு வகை சந்தாத் திட்டங்கள் உள்ளன; அவை பின்வருமாறு :—

1975 அக்டோபர் 28]

திட்டம்—	A	B	C
மாத சந்தாத் தொகை (ரூபாய்)	10	10	10
சந்தாக்கால அளவு ஆண்டுகள்	10	15	20
மாத ஓய்வூதியம் (ரூபாய்)	20	35	60
மொத்த ரொக்கத் தொகை (ரூபாய்)	1,500	2,500	4,000

திட்டம்—	D	E	F	G
மாத சந்தாத் தொகை (ரூபாய்)	10	20	30	60
சந்தாக்கால அளவு ஆண்டுகள்	25	20	15	10
மாத ஓய்வூதியம் (ரூபாய்)	100	100	100	100
மொத்த ரொக்கத் தொகை (ரூபாய்)	5,500	8,000	8,000	[illegible],500

ஒவ்வொரு வகைத் திட்டத்தின்கீழும், சந்தாதாரர், தாம் செலுத்தும் தொகையைப் போல் பன்மடங்குத் தொகை பெறுவார். இது எப்படி சாத்தியம் என்ற கேள்வி எழுகிறதா ? உங்கள் பணத்தை முதலீடு செய்யும் பொறுப்பை அரசு ஏற்கிறது. அதற்குக் கிடைக்கும் வட்டியைப் பல்கிப் பெருக்கி, எந்த விதமான ஆதாயத்தையும் எதிர்பார்க்காமல், உங்களுக்குக் கொடுக்கும் பணியைச் சிரமேற்றுச் செயல்படுத்த முற்படுகிறது. இத் திட்டத்தின் நிர்வாகச் செலவுகளையும் அரசே ஏற்கின்றது.

உதாரணமாக 'ஏ' வகைத் திட்டத்தைப் பார்ப்போம்—

ஒருவர் 1975 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதற் கொண்டு 10 ஆண்டு காலத்திற்கு மாதந்தோறும் ரூ. 10 சந்தா செலுத்துகிறார் என்று வைத்துக்கொள்வோம்.

அவருக்கு 1985 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாள் முதற்கொண்டு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 ஓய்வூதியம் கிடைக்கும்.

முப்பதாண்டுக் காலத்துக்குள், அதாவது 2015 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாளுக்கு முன்பு அவர் இறக்க நேரிட்டால், அவரது நியமனதாரருக்கு இந்த ஓய்வூதியம் முதலில் குறிப்பிட்ட 30 ஆண்டுகளுக்கு அதாவது 1—1—2015 வரை தொடர்ந்து கொடுக்கப்படும்.

சந்தாக் காலத்திற்குள் அவர் இறக்க நேரிட்டால், அதாவது 1984 டிசம்பர் மாதச் சந்தாத் தொகை செலுத்தப்படுவதற்கு முன் அவர் இறக்க நேரிட்டால், அப்பொழுது அவரது நியமனதாரர்—

(i) சந்தாதாரர் அதுவரை செலுத்தியுள்ள தொகையை ஆண்டு ஒன்றுக்கு 7 சதவீத தனி வட்டியுடன் சேர்த்துப் பெறலாம்.

அல்லது

(ii) நியமிக்கப்பட்டவர் இக்கணக்கைத் தொடர்ந்து நடத்தி வரலாம்; அதாவது 1984 டிசம்பர் திங்கள் முடிய அத்திங்களுக்கான சந்தாத் தொகையைச் செலுத்தி வரலாம். அவ்வாறு செலுத்தி வந்தால், அவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 ஓய்வூதியத் தொகை 1—1—1985 முதற்கொண்டு முப்பதாண்டுகளுக்கு கொடுக்கப்படும்.

மேற்சொன்ன ஓய்வூதியத் தொகையைத் தவிர, மொத்தத் தொகை ஒன்றும் கொடுக்கப்படும். விவரம் பின்வருமாறு :—

(i) ஓய்வூதியக் கால முடிவில், அதாவது 1—1—1985-லிருந்து 30 ஆண்டுகளுக்குப் பின், மொத்தத் தொகையாக ரூ. 1,500 கொடுக்கப்படும்.

(ii) சந்தாதாரர் விரும்பினால், மொத்தத் தொகையில் பாதியை அதாவது ரூ. 750 ஓய்வூதியக் கால ஆரம்பத்தில் அதாவது 1—1—1985 அன்று பெறலாம். அதன் பின்னர் அவருக்குப் பாதி ஓய்வூதியத் தொகைதான் கிடைக்கும். அதாவது அவருக்கு மாதம் ஒன்றுக்குக் கொடுக்கப்படத் தக்க ரூ. 20 ஓய்வூதியத் தொகையில் பாதியான ரூ. 10 தான் அவருக்குக் கிடைக்கும்.

"டி" வகைத் திட்டத்தின் கீழ் இதேபோன்று, 25 ஆண்டுகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 10 செலுத்தினால் அதன் பின்னர் 30 ஆண்டுகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100 கிடைக்கும். அதைத் தவிர மொத்தத் தொகையாக ரூ. 5,500 கிடைக்கும். சந்தாதாரர்களின் வசதிக்கேற்ப சந்தாத் தொகையும் சந்தாக் கால அளவும் அமையும் வகையில் பல்வேறு வகைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு உள்ளன.

1975 அக்டோபர் 28]

இத்திட்டத்தின்கீழ் சந்தாத் தொகைகள் செலுத்துவதற்கு வசதியாக பல்வேறு வங்கிகளுடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்தகைய வங்கிகளின் பெயர்கள் கடைசிப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. வங்கிகளின் எல்லாத் தமிழ்நாட்டுக் கிளைகளிலும் சந்தாத் தொகை செலுத்தலாம். தமிழ்நாடு முழுவதிலும் பரவியுள்ள 1,600 இந்த வங்கிக் கிளைகளில் சந்தாத் தொகையைச் செலுத்தலாம்.

இந்தத் திட்டத்தில் சேருவதற்கான விண்ணப்பப் படிவங்கள் இந்த வங்கிகளின் எல்லாக் கிளைகளிலும் கிடைக்கும். திட்டத்தில் சேர்ந்தவுடன் சந்தாதாரருக்கு கணக்குப் புத்தகம் ஒன்று கொடுக்கப்படும். இந்தத் திட்டம் குறித்த விதிகளை அக்கணக்குப் புத்தகத்தில் காணலாம்.

திட்டம் குறித்த முழு விவரங்கள் இந்த வங்கிகளின் எக் கிளையிலும் கிடைக்கும்; அல்லது சமூகநலப் பாதுகாப்புத் திட்ட இயக்குநர், நான்காவது மாடி, குறளகம், சென்னை-600001 என்னும் முகவரியிலிருந்தும் முழு விவரங்களைப் பெறலாம்.

இன்றைய உங்கள் சிறு சேமிப்பு நாளைய உங்கள் பாதுகாப்பு! இதனை உணர்ந்து, உங்கள் நன்மைக்காகவும் உங்கள் குடும்பத்தினரின் பாதுகாப்புக்காகவும் தமிழக அரசின் தலைசிறந்த இத்திட்டத்தில் உடனடியாகச் சேருங்கள்!

வங்கிகளின் பெயர்கள்.

ஆந்திரா பாங்க் லிமிடெட்.

இந்தியன் பாங்க்.

இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்.

கத்தோலிக் சிரியன் பாங்க் லிமிடெட்.

கர்நாடாக பாங்க் லிமிடெட்.

கரூர் வைஸ்யா பாங்க் லிமிடெட்.

கனரா பாங்க்.

கார்ப்பரேஷன் பாங்க் லிமிடெட்.

கும்பகோணம் சிடி யூனியன் பாங்க் லிமிடெட்.

சிண்டிகேட் பாங்க்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[1975 அக்டோபர் 28

சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா.

தஞ்சாவூர் பர்மனென்ட் பாங்க் லிமிடெட்.

தமிழ்நாடு மர்கென்டைல் பாங்க் லிமிடெட்.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்.

தேனு பாங்க்.

நெடுங்காடி பாங்க் லிமிடெட்.

நியுபாங்க் ஆப் இந்தியா லிமிடெட்.

பஞ்சாப் நேஷனல் பாங்க்.

பாரத் ஓவர்சீஸ் பாங்க் லிமிடெட்.

பாங்க் ஆப் இந்தியா.

பாங்க் ஆப் மஹாராஷ்டிரா.

மதுரை பாங்க் லிமிடெட்.

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்.

யூனியன் பாங்க் ஆப் இந்தியா.

லக்ஷ்மி விலாஸ் பாங்க் லிமிடெட்.

விஜயா பாங்க் லிமிடெட்.

வைஸ்யா பாங்க் லிமிடெட்.

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா.

ஸ்டேட் பாங்க் ஆப் பாட்டியாலா.

ஸ்டேட் பாங்க் ஆப் ஸௌராஷ்டிரா.

ஸ்டேட் பாங்க் ஆப் ஹைதராபாத்.

ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS